DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். STC.468/2016

**prosecution witness: PW-5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஞானராஜ் | தொழில் | : DSP, DCB Sivagangai. |
| த/பெ. | : தங்கதுரை | வயது | : 57 |
| ஊர் | : சிவகங்கை | சமயம் | : கிறிஸ்துவர் |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**11.03.2026**

(4 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர், சாட்சி விசாரணையை காணொளி வாயிலாக நடத்துவதற்கு அரசுதரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதின் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக சிவகங்கை மாவட்டம் முதன்மை நீதிமன்றத்தில் காணொளி அறையில் இருந்து ஆஜராகியுள்ளார். விஜய்வரதன் இளநிலை கட்டளைப்பணியாளர் என்பவர் Coordinator ஆக Remote site ல் உள்ளார். கோர்ட் Site ல் தேவிகா உதவியாளர் மூலமாக சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என்றும் வீடியோ ஆடியோ பதிவுகள் தெளிவாக உள்ளது என்று உறுதி செய்யப்பட்டது.)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே நடந்து வந்தால் சுமார் 10 நிமிடங்களில் வந்து விடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற 2 மணி நேரம் கழித்துத்தான் காவல் நிலையத்தில் தகவல் கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காளம் 8 காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக இந்த சம்பவத்திற்கு கிராம நிர்வாக அதிகாரிதான் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் உங்களுக்கு கீழ் பணிபுரியும் சிறப்பு சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அவரும் அங்கு நின்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். பிரிவு 30(2) காவல் சட்டம் அமலில் இருக்கிறது என்றால பொதுவாக தண்டோரா அடிக்கப்பட்டிருக்கும் என்றும் நோட்டீஸ் ஒட்டியிருக்க வேண்டும் என்றால் சரிதான். உண்மையில் இந்த மாதிரி சம்பவம் நடந்ததிருந்தால் அப்போதே

எதிரிகள் கைது செய்யப்பட்டிருப்பார்கள் என்றாலும் அவ்வாறு யாரும் கைது செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

2. சிறப்பு சார்பு ஆய்வாளர் சொன்னதுபோல் இந்த வழக்கில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அவ்வாறு நடத்திருந்தால் இடையூறு செய்ததால் கைது செய்யப்பட்டிருப்பார் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தில் கடற்கரை ஓரத்தில் சுமார் 500, 1000 நபர்கள் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். அங்கு போய் போலீசார் கடற்ரையில் நிற்க கூடாது கலைத்ததின் பேரில் நாங்கள் தொழில் செய்யும் இடம் இதுதான் எங்களது உரிமைகளை கேட்டு அமைதியான முறையில் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் உரிமைகளை கேட்டு பெறுகிறோம் என்று சொன்னதால் எங்களை எதிர்த்தா பேசுகிறீர்கள் என்று கேட்டு நடக்காத சம்பவத்திற்கு இந்த எதிரிகள் மீது கிராம நிர்வாக அதிகாரி மூலம் புகார் பெறுவதற்கு பதிலாக தங்களுக்கு கீழ் பணிபுரியும் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களை வைத்து உண்மைக்கு மாறாக வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரிகள் ஒவ்வொறு சங்கத்திற்கும் பொருப்பாளராக உள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் விசாரணை என்ற பெயரில் எதிரிகளை காவல் நிலையத்திற்கு வரவழைத்து பின்னிட்டு வழக்கின் ஆவணங்கள் சம்பவ இடத்திற்கு செல்லாமலேயே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. இந்த எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கின் சாட்சிகளை முறையாக விசாரிக்காமலும் நேரடியாக விசாரிக்காமலும் 161 வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கை பொறுத்தவரை பிரிவு 30(2) காவல் சட்டம் மாவட்ட ஆட்சியரால் எந்த காலகட்டத்தில் அமலில் இருக்கும் என்ற உத்தரவு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். கடற்கரைக்கும் தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையே சுமார் 1 கி.மீ. இருக்கும் என்றால் சரியல்ல. சுமார் 1/2 கி.மீ. இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ. இருக்கும். சிறப்பு சார்பு ஆய்வாளர் நடராஜன், பொந்து முனியாண்டி, ராமச்சந்திரன் ஆகியோர்களிடம் மறுவாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான்.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.03.11 10:45:26 +0530